# பன்முகப்பங்குதாரர்களின் பங்கேற்புடன் கூடிய ஆவணவாக்கல்: வடமாகாண நீர் வளம் தொடர்பான எண்ணிம சேமவைப்பிட உருவாக்கம்

ரூ.செந்தாழன்[1*], க.சந்திரசேகர்[2]

**அறிமுகம்**

“பன்முகப்பங்குதாரரின் பங்கேற்புடன்கூடிய அணுகுமுறையூடாக வடமாகாணத்தின் நீர் பாதுகாப்பு - பங்காற்றல் செயல் ஆய்வு” எனும் தலைப்பிலான இச்செயற்றிட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறு பீடங்களின் கல்வியியளாலர்களையும் மற்றும் சர்வதேச அளவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் துறைசார் ஆலோசகர்களையும் உள்ளடக்கியது. இலங்கையின் வடபகுதிக்கான நீர் வளப் பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கான இத்திட்டம் 2020ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த திட்டமானது மூன்று பிரதான நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவையாவன: அறிவியல் இடைவெளிகளை நிரப்புவதன் மூலம் நீர் வளம் சார்ந்த அறிவுசார் சமூகத்தை உருவாக்குதல்; நீர்ப்பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதற்கென ஒருங்கிணைக்கப்பட்ட சமூகமட்ட பங்கேற்பு மற்றும் கலந்துரை யாடலுக்கான தளத்தினை உருவாக்குதல்; சமூகம் சார்ந்த அளவீடுகள், அடைவுகள், மற்றும் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்து மட்டத்திலும் நீர் வளம் தொடர்பான சமூக விழிப்புணர்வை ஊக்குவித்தல்.

இவற்றுள், முதலாவது நோக்கத்தினை அடைவதற்கான செயல் வடிவமாக வடமாகாணத்தின் நீர் வளம் தொடர்பிலான புலமைசார் ஆவணங்களை உள்ளடக்கிய ஒரு எண்ணிம சேமவைப்பிடத்தை (digital repository) உருவாக்கும் முயற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த ஆவணங்களுக்கான தேடலை மேற்கொள்கையில், அச்சுருவிலான பல ஆவணங்கள் பல்வேறு நூலகங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடத்தில் காணப்பட்ட போதிலும் அவற்றிற்கான அணுகுகை மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமை அவதானிக் கப்பட்டது. வடமாகாணத்தில் நீர் வளப் பாதுகாப்புத் தொடர்பிலான சுகாதார, சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் பற்றியும், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றியும் வெளிப்படுத்தி நிற்கின்ற அறிவார்ந்த இப்படைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பங்குதாரர்களிடையே அறிவுப் பகிர்வு, நீர் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு, மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளுக்கு உதவுவதை இந்த எண்ணிமச் சேமவைப்பிடம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

இச்செயற்றிட்டத்தின் முதலாவது நோக்கத்தினை அடைவதற்கான செயற்பாடாக ஏற்கனவே வெளியிடப்பட்ட வடமாகாணத்தின் நீர் வளம் சார்ந்த அறிவார்ந்த ஆவணங்களை ஒரு தளத்தில் கொண்டுவருவதற்காக 'Northern Water Repository' எனும் எண்ணிம சேமவைப்பிடமொன்று Dspace மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு, 2022ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பொருட்டு, வடமாகாணத்தின் நீர் வளம் தொடர்பான அறிவார்ந்த வெளியீடுகள் பல்வேறு

[1*]*Corresponding Author:* ரூ.செந்தாழன், WASPAR செயற்றிட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. Email: srubini@univ.ifn.ac.lk.

[2]நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் நூலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, அவை யாவும் எண்ணிமப்படுத்தப்பட்டு, இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. நீர் தொடர்பான வெளியீடுகளைப் பொறுத்தவரையில், ஆய்விதழ் கட்டுரைகள், மாநாட்டு ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்கள் அல்லது கட்டுரைகள், நூல்கள், நூல் அத்தியாயங்கள், ஆய்வறிக்கைகள் போன்ற புலமைசார் வெளியீடுகளுடன், செயற்றிட்ட அறிக்கைகள், செய்தித்தாள் கட்டுரைகள், செய்தி உருப்படிகள், ஆராய்ச்சி மூல தரவுகள், மற்றும் காணொளிகள் என்பனவும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டன. மேலும், இவ் வெளியீடுகள் அனைத்தும் 12 விடயப்பரப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு, தேடலை இலகு படுத்துவதற் காக குறித்த ஆவணங்களுக்கான மீதரவுகளுடன் (தலைப்பு, ஆசிரியர், வெளியீட் டாளர், வெளியிடப்பட்ட ஆண்டு, ஆவண வகை, மொழி, தராதர எண், சுருக்கம், திறவுச்சொற்கள், DOI, URL, etc.) இச்சேமவைப்பிடத்தில் தரவேற்றப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டத்தின் கீழ் 2021-2023 காலப்பகுதியில், இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நீரின் தரம் தொடர்பான ஆவணங்கள் நூல்விபரண பகுப்பாய்விற்கு (bibiliometric study) உட்படுத்தப்பட்டு ஆய்வு இடைவெளிகள் கண்டறியப்பட்டது (Rubini *et al*., 2023). இந்த எண்ணிம சேமவைப்பிடத்தின் பராமரிப்பு மற்றும் இற்றைப்படுத்தல் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தினூடாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

தற்போது வரை, வடமாகாண நீர் வளம் தொடர்பில் ஆய்விதழ் கட்டுரைகள் (139), மாநாட்டு ஆவணங்கள் (94), நூல்கள், (02), நூல் அத்தியாயங்கள் (03), செயற்றிட்ட அறிக்கைகள் (08), மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் என்பன சேகரிக்கப்பட்டு இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாவணங்களுள் பெரும்பாலானவை பல்கலைக்கழகங்களால் வடமாகாண நீர் வளம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட ஆய்விதழ் கட்டுரைகளும் மாநாட்டுக் கட்டுரைச் சுருக்கங்களும் ஆகும். இவற்றிற்கு அடுத்த நிலையில், நீர் முகாமைத்துவம் சார்ந்த நிறுவனங்களால் (நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, நீர் வளச்சபை) வெளியிடப்பட்ட அறிக்கைகள் காணப்படுகின்றன. இவ்வாறு சேகரித்துப் பதிவேற்றப்பட்ட அனைத்து ஆவணங்களும் நீர் வளங்கள், நீரின் தரம், நீர்வாழ் சூழலியல், நீர்வாழ் உயிரியல் மற்றும் வேதியல், நீர்நிலவியல், நீர்சமூகவியல், நீர் ஆளுகை மற்றும் நீர் முகாமைத்துவம் போன்ற பல்வேறு விடயப்பரப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டு ரீதியில், சேகரிக்கப்பட்ட மொத்த ஆவண எண்ணிக்கையில் (n=248) நீரின் தரம் சார்ந்த ஆவணங்களே அதிகளவில் (ஏறத்தாழ 50%) காணப்படுகின்றன.

இச்சேமவைப்பிடமானது வடமாகாணத்தின் நீர் வளம் சாா்ந்த அனைத்து வகையான வெளியீடுகளையும் ஓரிடப்படுத்திச் சேமிப்பதனையும், இவ்வெளியீடுகளுக்கான அணுகலை இலகுவாக்குவதையும், கற்றல் மற்றும் ஆய்வு செயற்பாடுகளுக்கு உதவுவதையும் இலக்காகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

வடமாகாண நீர் வளம் சாா்ந்த வெளியீடுகள் அனைத்தையும் ஓரிடப்படுத்தி பாதுகாப்பதிலும், குறித்த அறிவாா்ந்த ஆவணங்களுக்கான அணுகலை அதிகரிப்பதிலும், அதன் மூலம் அறிவுசாா் தொடர்பாடலை மேம்படுத்துவதிலும், இப்பிரதேச நீர் வளப் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணா்வைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதிலும் இச்சேமவைப்பிடம் சிறந்த பங்களிப்பை நல்கத் தொடங்கியுள்ளது.

வடமாகாண நீர் வளம் தொடர்பான பல்வேறு வகையான ஆவணங்களையும், தகவல்களையும் உள்ளடக்கியுள்ள இச்சேமவைப்பிடம் தொடர்பான விழிப்புணர்வு கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாது பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும், புலமைசார் ஆவணங்களை மட்டுமல்லாது, வடமாகாண நீர் வளம் தொடர்பான ஏனைய வெளியீடுகளையும் இச்சேமவைப்பிடத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் அவற்றிற்கான அணுகலை விரிவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தெரிவுநிலையை அதிகரிப்பதற்காக யாழ் பல்கலைக்கழக நூலகத்தினுடைய வலைத்தளத்தில் இச்சேமவைப்பிடத்தின் URLக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேமவைப்பிடத்தை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி, பராமரிப்பதற்கு தேவையான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நூலக ஆளணியினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், துறைசார் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுப்பது நன்மை பயக்கும்.

**திறவுச்சொற்கள்:** எண்ணிம சேமவைப்பிடம், நீர் வளம், Northern Water Repository, இலங்கை.

**உசாத்துணை**

Jones, R.E., Andrew, T. & MacColl, J. (2006). The institutional repository. Elsevier.

Rubini, S.,Chandrasekar, K.,Janen, T.& Sriskandarajah, N. (2023). Water quality in Northern Province of Sri Lanka: A bibliometric analysis of publications 1960–2021. *World Water Policy*, 9(3), 414–436. https://doi.org/10.1002/wwp2.12117